செய்தி வெளியீடு எண். 44-2017 நாள்: 23.06.2017

**விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள சுயதொழில் தொடங்க தாய்கோ வங்கி மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

******

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்கள் தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள சுயதொழில் தொடங்கவும், தொழிலை மேம்படுத்தவும் குறைந்த வட்டியில் தனிநபர் கடன் ரூ.50 ஆயிரம் முதல் அதிகபட்சம் ரூ.20 லட்சம் வரையிலும், சுயஉதவி குழு சிறுகடன் திட்டத்தில் ஒரு நபருக்கு ரூ.50 ஆயிரம் முதல் அதிகபட்சம் ரூ.1.50 லட்சம் வரையிலும் கல்வி கடன் திட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு ரூ.3 லட்சம் முதல் அதிகபட்சம் ரூ.6 லட்சம் வரையிலும், கறவை மாட்டுக் கடன் திட்டத்தில் ரூ.25 முதல் ரூ.70 ஆயிரம் வரையிலும், ஆட்டோ கடன் திட்டத்தில் தனிநபர் கடன் விதிமுறை அடிப்படையில் தாய்கோ வங்கி மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது.

இக்கடன் உதவிகள் பெறுவதற்கான தகுதிகள் தமிழ்நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினர் இனத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 60 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். தனிநபர் ஆண்டு வருமானம் கிராமப்புறத்திற்கு ரூ.81 ஆயிரம், நகர்புறத்திற்கு ரூ.1.03 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.6 லட்சம் வரையிருந்தால் திட்டம் 2-ன் கீழ் விண்ணப்பிக்கலாம். இதற்கான சிறப்பு முகாம் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருகிற 30.06.2017 தேதி காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ளது.

மேற்கண்ட வகைகளின் படியான டாம்கோ கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற்று பயனடையுமாறு சிறுபான்மையினர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.